©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 8] சென்னை, புதன்கிழமை, மார்ச் 4, 2009
மாசி 20, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

---

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29–ஆம் நாளன்று குடியரசு தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 2/2009**

***1908–ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தை அது தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துவதைப் பொறுத்த அளவில் மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம் 2008–ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் XVI/1908. **2.** 1908–ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் 22–A எனும் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 22–A எனும் பிரிவிற்குப் பதிலாக அமைத்தல்.

“*22–A ஒரு சில ஆவணங்களைப் பதிவு செய்வதற்கு மறுத்தல்.*—இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், பதிவு செய்யும் அலுவலர் பின்வரும் ஆவணங்களுள் எதனையும் பதிவு செய்ய மறுத்தல் வேண்டும், அதாவது:—

(1) தொடர்பான சட்டத்தின்படி வகை செய்யப்பட்டவாறான தகுதி வாய்ந்த அதிகார அமைப்பினால் அல்லது அத்தகைய அதிகார அமைப்பானது இல்லாத போது, இந்த நோக்கத்திற்காக மாநில அரசினால் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்பு ஒன்றினால் இது குறித்து வழங்கப்பட்ட ஒப்பளிப்பினைப் பதிவு செய்யும் அலுவலரின் முன்பு தாக்கல் செய்தாலன்றி, விற்பனை, கொடை, அடமானம், பரிமாற்றம் அல்லது குத்தகை என்ற வகையில்,—

(i) மாநில அரசிற்கு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பிற்கு அல்லது 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊர் அமைப்புச் சட்டத்தின் 9–A எனும் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்குச் சொந்தமான, தமிழ்நாடு சட்டம் 35/1972.

(ii) 1959–ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் சட்டமானது பொருந்துகிற சமய நிறுவனம் எதற்கும் சொந்தமான அல்லது கொடுக்கப்பட்ட அல்லது அறக்கட்டளையாக வழங்கப்பட்ட; தமிழ்நாடு சட்டம் 22/1959.

(iii) பூதான் வேள்விக்காக நன்கொடையாக வழங்கப்பட்டு, 1958–ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான் வேள்விச்சட்டத்தின் 3–ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில பூதான் வேள்விக் குழுமத்திடம் உற்றடைந்துள்ள; அல்லது தமிழ்நாடு சட்டம் XV/1958.

(iv) 1995–ஆம் ஆண்டு இஸ்லாமிய அறக்கட்டளைச் சட்டத்தின்படி தமிழ்நாடு இஸ்லாமிய அறக்கட்டளை வாரியத்தின் மேற்பார்வையின்கீழ் வருகின்ற இஸ்லாமிய அறக்கட்டளையின், மையச் சட்டம் 43/1995.

அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது தொடர்பான முறையாவணம்.

(2) தொடர்புள்ள திட்ட அதிகார அமைப்பிடமிருந்து நிலங்களை மேம்பாடு செய்வதற்கான அனுமதியின்றி வீட்டுமனைப் பிரிவுகளாக மாற்றப்பட்ட அத்தகைய நிலங்களின் சொந்த உடைமை உரிமையை மாற்றம் செய்வது தொடர்பான முறையாவணம்.

*வரம்புரை.*—ஆனால், அதே வீட்டுமனைப் பிரிவானது ஏற்கனவே முன்னதாக வீட்டு மனைப் பிரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது எனக் காண்பிக்கப்படுமேயானால் அந்த வீட்டுமனைப் பிரிவுகள் அத்தகைய அனுமதியின்றி பதிவுச் செய்யப்படலாம்.

*விளக்கம்* I.—இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ‘உள்ளாட்சி அதிகார அமைப்பு’ என்றால்,—

(i) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதன்படியேனும் அமைக்கப்பட்ட மாநகராட்சி எதுவும்; அல்லது

(ii) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட நகராட்சி மன்றம் ஒன்று; அல்லது தமிழ்நாடு சட்டம் V/1920.

(iii) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒன்று அல்லது சிற்றூராட்சி ஒன்று; அல்லது தமிழ்நாடு சட்டம் 21/1994.

(iv) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதன்படியேனும் அமைக்கப்படக்கூடிய பிற மாநகராட்சி எதுவும்

எனப் பொருள்படும்.

*விளக்கம்* II.—இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ‘திட்ட அதிகார அமைப்பு’ என்றால் 11–ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட அதிகார அமைப்பு எனப் பொருள்படும்; மற்றும் அது 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் 9–A எனும் பிரிவின்படி அமைக்கப்பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தை உள்ளடக்கும். தமிழ்நாடு சட்டம் 35/1972.

(3) இரத்து செய்வது தொடர்பான விற்பனை ஆவணங்களின்கீழ் கோரும் நபரின் அனுமதியில்லாமல் அவ்வாறான விற்பனை ஆவணங்களை இரத்து செய்வது தொடர்பான முறையாவணம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

## சட்ட எண் 3/2009

***1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம் 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976.

**2.** 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில் "முப்பத்து இரண்டு ஆண்டுகள் எட்டு திங்களுக்கு" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "முப்பத்து மூன்று ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.